இடம் இரயில்வே, நான்கு வழிச் சாலைபோன்ற எல்லா infrastructure-களையும், எல்லா வசதிகளையும் கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய வேலூர் பகுதியில் அல்லது காட்பாடி பகுதியில்— B.H.E.L. நிறுவனம் நிறைய இடத்தை எடுத்து, காலியாக வைத்திருக்கிறார்கள்; இராணிப்பேட்டைபோன்ற பகுதியிலாவது ஒரு மென்பொருள் பூங்காவை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஞானசேகரன் அவர்கள் வேலூரை மாநகராட்சி மன்றமாக ஆக்க வேண்டுமென்று நீண்ட காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். மாநகராட்சி மன்றமாக வேலூர் ஆன பிறகு, மென்பொருள் பூங்காவை அங்கே தொடங்குவது பற்றி யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

72—

குடிநீர் வசதி

***3534—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சி ஊராட்சி, மணியாரங்கொல்லை பகுதி மற்றும் மேலக்காடு ஊராட்சி ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், துவரங்குறிச்சி ஊராட்சி, மணியாரங்கொல்லை பகுதியில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஒரு கைப் பம்புமூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 42 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தம்பிக்கோட்டை, மேலக்காடு ஊராட்சிப் பகுதிகளில் 2006-2007 ஆம்

2007 ஏப்ரல் 17]

ஆண்டு, நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் அனுமதிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட உள்ளது.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சி ஊராட்சியில் இருக்கக்கூடிய மணியாரங்கொல்லை பகுதி என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொன்ன காரணத்தினால் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். தற்போது அதிகாரிகள் அங்கு pipe line-ஐ மட்டும் extend பண்ணித் தண்ணீர் கொடுத்தால் போதும் என்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விரைவிலே செய்து கொடுக்க வேண்டுமென்று அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொண்டு, தம்பிக்கோட்டை, மேலக்காடு ஊராட்சிப் பகுதிகளிலே புதிய Tank ஒன்று நபார்டுமூலமாகக் கட்டப்பட்டு, விரைவிலே திறக்கப்பட்டு, பொது மக்களுக்குத் தண்ணீரை வழங்க இருக்கிறார்கள் என்ற செய்தியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. எனவே, நல்ல முறையிலே இந்தத் திட்டங்களைக் கொடுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பட்டுக்கோட்டை தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

குளிர்பதனக் கிடங்கு

***1093—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் தக்காளியைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?